OS No.70/2017, நாள்: 27.08.2019

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஹேமநாதன் | வயது | : 34 |
| தந்தை பெயர் | : அர்சுணன் | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : திருவயலூர் | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : ___ |

வா.சா.1 ___ ஹேமநாதன் ஆஜர், முதன்மை விசாரணை :-

நான் இவ்வழக்கில் 2ம் வாதி. மேற்படி நான் எனக்காகவும் 1ம் வாதிகக்காகவும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன். 30.04.2014ம் தேதியிட்ட இ.ம.எண்.232/2011ல் பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையின் நகல் **வா.சா.ஆ.1** ஆகும். நிறைவேற்று மனு எண்.8/2016ன் மனுவின் நகல் **வா.சா.ஆ.2** ஆகும். நிறைவேற்று மனு எண்.8/2016 ல் பிறப்பக்கப்பட்ட சுவாதின கட்டளை போச்சம்பள்ளி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ததற்கான ஆவணம் **வா.சா.ஆ.3** ஆகும். பட்டா மாறுதல் கோரி இணையதளத்தில் பதிவு செய்த விண்ணப்பத்தின் நகல் **வா.சா.ஆ.4** ஆகும். 26.02.1991ம் தேதியில் 1ம் பிரதிவாதி 3ம் பிரதவிாதிக்கு எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் **வா.சா.ஆ.5** ஆகும். 10.04.1995ம் தேததியில் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்த

தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் **வா.சா.ஆ.6** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.